# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 29 திங்கட்கிழமை (14-09-1998) UTHAYAN -A Lively National Tamil Daily சுடர்: 248


# இரசாயன பகுப்பாய்வாளர் இன்று யாழ். வருகின்றனர்!

## ஊர்காவற்றுறை பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், செப். 14

ஊர்காவற்றுறையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் குழு ஒன்றின் நடமாட்டத்தை அவதானித்த படையினர் அக்குழு மீது சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தியதாக பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பு குறித்து ஆய்வு நடத்தப்படும்

கொழும்பு, செப்டெம்பர் 14

நல்லூர் இந்து விடுதிக் கட்டடத்தில் இயங்கும் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்கள உயர் அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இந்து விடுதிக் கட்டடத்தில் வெடித்த குண்டு தொடர்பான ஆய்வுகளை இவர்கள் மேற்கொள்வார்கள்.

குண்டு வெடிப்பு இடம்பெற்ற இந்து விடுதிக் கட்டடம் தொடர்ந்து படையினரின் பாதுகாப்பில் உள்ளது.

அதேசமயம் யாழ். மாநகர சபைக் கட்டடத்துக்குள் வெடித்த குண்டு ஏற்கனவே வைக்கப்பட்டிருந்ததா அல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி ஜனாதிபதி சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, செப் 14

தமிழ்மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணித் தூதுக்குழுவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இன்று நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட யாழ். மேயர் பொன். சிவபாலனின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறுவதையொட்டியே இச்சந்திப்பு பின்போடப்பட்டது.

(இ-3-21)

## குஞ்சுக்குளம் பகுதியில் புலிகள் தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப். 14

குஞ்சுக்குளத்துக்கு வட மேற்குப் பகுதியில் "வெற்றி உறுதி" துருப்பினர் மீது நேற்று முன்தினம் நண்பகல் 1.30 மணிக்கு விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தினர் என பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இத்தாக்குதலை படையினர் முறியடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம்—கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.15 மணியளவில் கிளிநொச்சியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் ஒரு பங்கரை அழித்ததாகவும்—அவர்களுக்கு சேதங்களை ஏற்படுத்தியதாகவும்—மேலும் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு சம்பவத்தில் அன்று இரவு 12.15 மணிக்கு படையினரின் சினைப்பர்த் தாக்குதலில் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சிவபாலனின் இறுதிச்சடங்கு இன்று பூதவுடல் காலை யாழ். நகர் வருகிறது

யாழ்ப்பாணம், செப் 14

கடந்த வெள்ளிக் கிழமை இடம் பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்த யாழ். மேயர் பொன். சிவபாலனின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 11 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறவிருக்கின்றன.

சித்தன்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பூதவுடல் இன்று காலை 7-00 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள அவரது வாசஸ்தலத்துக்கு எடுத்து வரப்படும்.

மக்கள் அஞ்சலியை அடுத்து அஞ்சலி உரைகள் இடம்பெறும். அதன் பின்னர் காலை 11 மணிக்கு பூதவுடல் அங்கிருந்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கோம்பயன்மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

தவிர்க்க முடியாத காரணங்களால் பூதவுடலை மாநகரசபை அலுவலகத்தில் வைக்க முடியாதுள்ளதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வயிற்றோட்டம்

மட்டக்களப்பு, செப். 14

பொலன்னறுவை மாவட்டத்தில் பரவிய வயிற்றோட்டம் நேற்று மட்டக்களப்பு நகருக்கும் பரவியது

பொலன்னறுவை மாவட்டத்தில் வெலிகந்தப்பகுதிக்கு வேலைக்குச் சென்று மட்டக்களப்புக்குத் திரும்பியவர்கள் மூலமே இது பரவியதாகவும் —

கடந்த இரு நாள்களில் 10 பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

வயிற்றோட்ட நோயால் பீடிக்கப்படுபவர்களைத் தங்க வைக்க மட்டக்களப்பில் தனிவார்ட் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## யாழ். மாநகர சபையின் புதிய மேயர் யார்?

### விரைவில் முடிவு செய்யப்படும்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். மாநகர சபைக்குப் புதிய மேயராக எவரை நியமிப்பது என்பது குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப-தலைவர் வி. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தேர்தல் மூலம் மக்கள் எமக்கு அளித்த ஆணையின்படி புதிய மேயர் ஒருவரை நியமிக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு. விரைவில் அது தொடர்பாக முடிவு செய்வோம் என்றும் அவர் கூறினார். (இ-3)

## முல்லைத்தீவு, கிளிநொச்சி அரச செயலகங்கள் இன்று முதல் இயங்கும்

வவுனியா, செப். 14

முல்லைத்தீவு, கிளிநொச்சி அரச செயலகங்கள் அவசர அத்தியாவசியப் பணிகளுக்காக மீண்டும் இன்று முதல் இயங்கவிருக்கின்றன.

நிவாரண வெட்டை ஆட்சேபித்து இடம்பெயர்ந்த மக்கள் மேற்கொண்டு வந்த மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களால் இந்த இரு அரச செயலகங்களின் பணிகளும் ஸ்தம்பித்திருந்தன.

இரு அரச அதிபர்களும் நேற்று வெகுஜன அமைப்புப் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தினர்.

மக்களின் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள செயலகங்களை இயங்க அனுமதிக்குமாறும் —

இம்மாத இறுதிக்குள் நிவாரண வெட்டுத் தொடர்பாக நல்ல பதிலைப் பெற்றுத் தருவதாகவும் —அரச அதிபர்கள் தெரிவித்தனர்.

இம்மாத இறுதிவரை காலக்கெடு விதித்துத் தமது போராட்டத்தைப் பின்போடுவதாக அவர்கள் தெரிவித்ததையடுத்து, அரச செயலகங்கள் இன்று முதல் இயங்க ஆரம்பிக்கும்.

(இ-3)

## செஞ்சிலுவை அதிகாரி பொலீஸ் விசாரணையில்!

வவுனியா, செப். 14

ஐ. தே. க. நியமன எம். பியான ஜயலத் ஜெயவர்த்தனா மேற்கொண்ட மடுப் பயணம் தொடர்பாக அவருடன் சென்ற செஞ்சிலுவைச் சங்க வடக்கு — கிழக்கு இணைப்பாளர் சிவநாதன் கிஷோர் இரகசியப் பொலீஸாரால் கடந்த வெள்ளிக்கிழமையன்று விசாரிக்கப்பட்டார்.

வவுனியாவில் புலனாய்வுப் பிரிவில் பொலீஸ் அத்தியட்சகர் நந்தன முனசிங்கவினால் விசாரிக்கப்பட்ட இவர் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் எஸ். தியாகேஸ்வரன் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

அங்கு இவரின் வாக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபை நேற்று அவசரமாக கூடி நிலைமையை ஆராய்ந்தது

### ஆவணங்களை பாதுகாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். மாநகர சபையின் அவசரக்கூட்டம் ஒன்று நேற்றுக்காலை நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பால் சேதமடைந்துள்ள யாழ். மாநகர சபை அலுவலகத்திலுள்ள ஆவணங்கள், கோவைகள், உபகரணங்கள், தளபாடங்கள் ஆகியவற்றை சேகரித்து பண்டாரிகுளத்தில் இருக்கும் மாநகர சபைக்களஞ்சியத்தில் வைப்பதெனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டம் துணை மேயர் ந. ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாநகர சபையின் உறுப்பினர்கள் பங்குபற்றிய இக்கூட்டத்தில் உடனடிச்செயற்பாடுகள் குறித்து ஆராயப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 5 இலங்கை தமிழர் உட்பட 7பேர் சென்னையில் கைது

### லண்டன் செல்ல போலி வீஸா

கொழும்பு, செப். 14

சுவிஸில் இருந்து திரும்பியதாகத் தெரிவிக்கும் போலி வீஸாவுடன் லண்டன் செல்லமுயன்ற 5 இலங்கைத் தமிழர்கள் உட்பட 7 பேர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இலங்கைத் தமிழர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும்—

கைதானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

எஞ்சிய இருவரும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-164)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

தமிழ் பேசும் மக்களின் சுதந்திர வாழ்வுக்காகத் தம்முயிரை அர்ப்பணித்த
மக்களால் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாநகர முதல்வர்

## அமரர் பொன். சிவபாலன் (சட்டத்தரணி)

அவர்களுக்கும்







### அவருடன் படுகொலை செய்யப்பட்ட

நிர்வாக உத்தியோகத்தர், பதில் ஆணையாளர் **சு. பத்மநாதன்,**
வேலைப்பகுதி பொறியியலாளர் **மா. ஈஸ்வரன்,**
வரைபடக்கலைஞர் **திருமதி மல்லிகா இராசரத்தினம்,**
சுருக்கெழுத்தாளரும் தட்டெழுத்தாளருமான **பொ. பத்மராஜா**

**ஆகியோருக்கும்**

**எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்!**

''பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி கிளியே! ஆறுமுகன் தஞ்சமடி''

என்ற யோகர் சுவாமிகளின் கூற்றுக்கிணங்க நல்லூரானை நாடிவந்து நற்பணியாற்றிய உங்களுக்கு இக்கதியா?

''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்''
என்ற யோகமுனியின் கூற்றினாலேயே ஆறுதலடைவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

★ மாநகர மன்ற அலுவலர்கள் ஊழியர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரையும் எமது முதல்வரின் வாசஸ்தலத்தில் சமுகங் கொடுத்து அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகின்றோம்.

★ இன்று காலை 10 மணிக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும் முதல்வரின் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் சென்று தகனக் கிரியைகள் நடைபெறும்.

★ இறுதி ஊர்வலத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தவிர்க்க முடியாத காரணத்தால் யாழ். மாநகர சபையில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள் அன்னாரின் ஸ்ரான்லி வீதி இல்லத்தில் நடைபெறுகின்றன என்பதையும் அறியத் தருகின்றோம்.

**பிரதிமுதல்வர், உறுப்பினர்கள்,**
**அலுவலர்கள், ஊழியர்கள்.**

[சி/4871] **யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு வெடிப்பதற்கு சற்று முன்னர் தேநீர் வாங்கச் சென்றவர் யார்?

## பொலீஸாரின் கவனம் அவர் மீது

கொழும்பு, செப். 14

யாழ். மாநகர மேயரின் அலுவலகத்தில் கடந்த வெள்ளியன்று குண்டு வெடிப்பதற்குச் சற்று முன்னர் தேநீர் வாங்குவதற்காக வெளியே சென்றது யார் என்பதைக் கண்டறிவதில் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகர சபைக் கட்டடத்தில் வெள்ளியன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

கட்டடத்தின் கூரைக்கும், சீலிங்குக்குமிடையே பொருத்தப்பட்டிருந்த குண்டே வெடித்ததாக விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலீஸார் தெரிவிக்கின்றனர். திருமதி யோகேஸ்வரன் மேயராகப் பணியாற்றிய காலத்தில் திருமண மண்டபமாக இருந்த இக் கட்டடம் திருத்தப்பட்டது. அப்போதே இக் குண்டு பொருத்தப்பட்டிருக்கலாமெனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். கட்டடம் திருத்தப்படும் போது தொழிலாளி போல் இங்கு கடமையாற்றிய புலி உறுப்பினர் ஒருவரே குண்டைப் பொருத்தியிருக்கலாமென்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மாநகர சபைக் கட்டடத்தில் குண்டு வெடிப்பதற்குச் சுமார் ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் தேநீர் வாங்கி வருவதற்கென வெளியே சென்ற ஒருவர் மீது பொலீஸாரின் கவனம் திரும்பியுள்ளது. இந்த நபர் திடீரெனத் தலைமறைவாகி விட்டாரென்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

—இவ்வாறு கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-10)

# இறுதி ஊர்வலத்தில் பங்குகொள்ள அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். மாநகரசபை மேயர் பொன். சிவபாலனின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறவுள்ளன. எனவே இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளிலும் இறுதி ஊர்வலத்திலும் பங்கு கொள்ளுமாறு மாநகரசபை ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய தமிழ்க்கட்சிகள் அழைப்புவிடுத்துள்ளன.

மேலும் வர்த்தக நிலையங்களை மூடியும் கறுப்புக் கொடிகளை தொங்கவிட்டும் வாழைச் தோரணங்களைக் கட்டியும் துக்கத்தை அனுஷ்டிக்குமாறும் வர்த்தகர்களையும் பொதுமக்களையும் அனைத்துத் தமிழ்க்கட்சியினரும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-6)

# மாணவர் பாதிப்பு

தென்மராட்சி, செப். 14

பளை வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் போதிக்கும் ஆசிரியர்கள் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளதால் இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கணித, விஞ்ஞான பாட கல்வி நிலை பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர்கள் தெரிவித்தனர். (ஐ-117)

## குண்டுவெடிப்பில் பலியான

# பொலீஸ் அதிகாரிகள் அனைவரும் பதவி உயர்வு!

கொழும்பு, செப். 14

யாழ். மாநகரசபை குண்டுவெடிப்பில் பலியான பொலீஸ் மற்றும் படை அதிகாரிகள் அனைவருக்கும் மரணத்துக்குப்பிந்திய பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். நகரத்தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் மேஜர்ஜெனரலாக பதவிஉயர்த்தப்பட்டிருப்பது தெரிந்ததே. அவருடன் பலியான யாழ். நகர பிரிகேட் மேஜரான கப்டன் ராமநாயக்க மேஜராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சந்திரா பெரேரா பிரதிப் பொலீஸ்மா அதிபராகவும், உதவிப்பொலீஸ் அத்தியட்சகர்களான சரத் பெர்னாண்டோ. சந்திரமோகன், ஆகியோர் பொலீஸ் அத்தியட்சகர்களாகவும், யாழ். பொலீஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் கே. மோகனதாஸ் உதவிப் பொலீஸ் அத்தியட்சகராகவும், கான்ஸ்டபிள் ஜெராட் சார்ஜண்டாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ஐ)

# இரத்தினபுரி தோட்டப் பகுதிகளில் வன்செயல்கள் தொடர்கின்றன!

கொழும்பு, செப். 14

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தோட்டம் ஒன்றில் கடந்த செவ்வாயன்று இரவு இரு சிங்கள இளைஞர்கள் தோட்டத் தொழிலாளர்களால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து அங்கு மூண்ட வன்செயல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் தொடர்ந்து பீதி நிலவுவதால் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்றுக் காலைவரை இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டிருந்தது.

வெள்ளிக்கிழமை இரவு கல்பட பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தின் டிவிஷனிற்குள் புகுந்த கோஷ்டி ஒன்று ஒரு லயனில் கொள்ளை அடித்ததுடன் லயனுக்கு தீவைத்தனர். கலவரங்கள் ஏனைய தோட்டங்களுக்கும் பரவலாம் என அஞ்சப்படுகிறது. பல தோட்டங்களுக்கு பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருப்பதாக தோட்டத் தொழிலாளர்கள் நிவித்திகல மற்றும் இரத்தினபுரி பொலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-6)

# பாடசாலைச் சூழலில் மண் அரண் நீக்கம்

பருத்தித்துறை, செப். 14

புத்தூர் மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மண் அணைகள் அகற்றப்பட்டுள்ளன.

புத்தூர் சிவில் நிர்வாக அதிகாரி எல். ஆர். மெண்டிஸ் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் உறுதியளித்தபடி கடந்த வாரம் அச்செழு முகாமிலிருந்து புல்டோசர் வரவழைக்கப்பட்டு பாடசாலையைச் சுற்றி போடப்பட்ட மண் பாதுகாப்பு அரண் அகற்றப்பட்டுள்ளது. இதுவரை பாடசாலை வளவினுள் மிதிவெடி எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாடசாலையைச் சுற்றி முள்வேலி அமைத்துத் தருவதற்கும் இராணுவ சிவில் அதிகாரி சம்மதம் தெரிவித்துள்ளார்.

புத்தூர்ச் சந்தியில் இருந்த சோதனை நிலையம் ஐம்பது மீற்றர் தூரத்திற்கப்பால் நகர்த்தப்பட்டுள்ளது.

## யாழ். மாநகரசபைப் பகுதியில்

# 3 ஆயிரத்து 156 வீடுகளில் குடியிருப்பாளர்கள் இல்லை!

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 3 ஆயிரத்து 156 வீடுகள் ஆள்கள் அற்ற வெற்று வீடுகளாக இருக்கின்றன. கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் இவ்வாண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இருந்து இது கண்டறியப்பட்டுள்ளது.

மாநகரசபைப் பகுதியில் மொத்தம் 17 ஆயிரத்து 707 வீடுகள் இருக்கின்றன.

இவற்றில் 17 ஆயிரத்து 310 குடும்பங்களைச் சேர்ந்த 80 ஆயிரத்து 57 பேர் வசித்து வருகின்றனர்.

இவர்களில் 14 ஆயிரத்து 551 குடும்பங்கள் இப்பகுதியின் நிரந்தரவாசிகளாகவும், 2 ஆயிரத்து 759 குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையிலும் வசித்து வருகின்றன.

இப் பகுதி மக்கள் தொகையில் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் எண்ணிக்கை 37 ஆயிரத்து 84 ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 973 ஆகவும் உள்ளது. (ஐ-6)

# தோட்டத் தொழிலாளருக்கு ரூ.1 கோடி சொத்து இழப்பு!

இரத்தினபுரி, செப். 14

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தோட்டங்களில் கடந்த செவ்வாயன்று வெடித்த வன்செயல்களால் தொழிலாளர்களுக்குத் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 4 ஆயிரம் தொழிலாளர்களும், அவர்களது குடும்பத்தவர்களும் தோட்டங்களை விட்டு வெளியேறி பாடசாலைகள், தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் உறவினர் வீடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

இதுவரை 90-க்கும் மேற்பட்ட லயன்காம்பிராக்கள் எரியூட்டப்பட்டுள்ளன. (ஐ)

# மாட்டுக் கன்றைத்திருட முயன்றவர் சிக்கினார்!

செம்பியன்பற்று, செப். 14

பிறந்து 4 நாள்கள் நிறைவடைந்த கன்றுக்குட்டியை விறகினுள்மறைத்து திருடிக் கொண்டுசென்ற நபர்வல்லிபுரம்சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் வடமராட்சி குடத்தனை விளாங்காடுப் பகுதியில் இடம்பெற்றது. விறகுவெட்டச்சென்ற மேற்படி நபர்விறகுக்குள் வைத்து 4 நாள்நிரம்பிய இக்கன்றை திருடிக்கொண்டு சென்றபோது கன்றின் சொந்தக்காரரும் துரத்திக் கொண்டு வந்தார். வல்லியுரம் சோதனைச் சாவடியில் கன்று கத்திக் கொண்டு திமிறியதால் மேற்படி நபர் நிலத்தில் வீழ்ந்து விட்டார். கன்றின் உரிமையாளர் விடயத்தைக் கூற அப்பகுதிப் படையினர் திருட்டுக் குற்றத்தில் ஈடுபட்டவரை கடுமையாக எச்சரித்து விடுவித்துள்ளனர் (ஐ-36)

# கோப்பாய் வாசிகள் மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 14

கோப்பாய்ப் பகுதியிலுள்ள வீடொன்றில் இராணுவச் சீருடையில் புகுந்து 93 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியதாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்கள் கடந்த வாரம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களை இம்மாதம் 18 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட இவர்கள் கோப்பாய்ப் பொலீஸார் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதே இடத்தைச் சேர்ந்த ந. சுதாகரன், வி. ஜெயசீலன், ப. சிறிதரன் ஆகிய சந்தேக நபர்களே இச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர். இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக எஸ். செல்வரூபன், எஸ். செல்வகுமார் ஆகிய சந்தேக நபர்களும் பொலீஸாரினால் கைது செய்யப்படவுள்ளனர். (ஐ-5)

# தொண்டமானாறில் மதகுகள் திருத்தம்

வடமராட்சி, செப் 14

தொண்டமானாறு மத்தியில் நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த இரு மதகுகள் திருத்தப்பட்டு வருகின்றன.

உடுப்பிட்டி — தொண்டமானாறு வீதியில கெருடாவிலிலும்,

துன்னாலை — தொண்டமானாறு வீதியில் சந்நிதி கோவிலுக்கு அண்மையிலுள்ள மதகுமே திருத்தப்பட்டு வருகின்றன.

இத்திருத்த வேலைகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதால் இன்னும் சில வாரங்களில் இம் மதகுகள் ஊடாக போக்குவரத்துக்கள் இடம்பெறும். (ஐ-178)

# கடலுணவுப் பொருள்களை அனுப்ப தனி விமானம் அமர்த்த முயற்சி

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணத்திலிருந்து கடலுணவுப் பொருள்கள் மற்றும் விவசாயப் பொருள்களை கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்காக விமானம் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்படவுள்ளது.

இந்த விமானத்தில் 5 ஆயிரம் கிலோ நிறையுடைய பொருள்களை வாரத்தில் ஒரு தடவை அல்லது இரு தடவைகள் அனுப்பி வைப்பது பற்றி யாழ். செயலக அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு கொழும்பில் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனேயே இந்த ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் வாடகைக்கு விமானம் ஒன்றை அமர்த்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இந்த வாடகை விமானத்தின் சேவை ஆரம்பிக்கப்பட்டதும் [illegible] தொழிலாளர்களால் பிடிக்கப்படும் இறால், நண்டு மற்றும் கடலுணவுப் பொருள்களுக்கும், விவசாய பொருள்களுக்கும் கொழும்பில் நல்ல கிராக்கி ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (ஐ-5)

# சிறுமி காயம்

முருங்கை மரத்தில் ஏறி விளையாடிய போது தவறி விழுந்த சிறுமி இரண்டு கைகளும் முறிந்து காயமடைந்தார்.

நாவற்குழியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அன்ரனிராஜ் மரியமலர் (வயது 8) என்ற சிறுமியே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாகவும் சிவன் கோயிலுக்கு அண்மையிலும் பிரதான வீதியில் அமைந்த இரு கடைகள் விற்பனைக்குண்டு. தனித்தனியாகவோ சேர்ந்தோ வாங்கிக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும். Dr. N. பத்மநாதன், வதிரி, கரவெட்டி.

(59161)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்குப் பாடசாலை வீதியில் 2½ பரப்புக் காணியுடன் வீடொன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மணியம் வர்த்தக நிலையம், பலாலி றோட், உரும்பிராய்.

( 59134 )

## வீடுகள் விற்பனைக்கு

யாழ். நகர்ப்புறத்தில் அடைக்கல மாதா கோயிலுக்கு அண்மையில் நல்ல நிலையில் சகல வசதிகளுடன் 3,4 அறைகளைக் கொண்ட, ஒரு வளவில் அமைந்துள்ள இரு வீடுகள் விற்பனைக்குண்டு, தனித்தனியே விற்கப்படமாட்டாது. Dr. Suraj Somasundaram. 25 Sylvester Road, Mountlavinia என்ற விலாசத்தில் தொடர்பு கொண்டு சிபார்சுக் கடிதத்துடன் செல்பவர்களுக்கு மட்டுமே வீடுகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்படும். T.P- No. 074-201582 வெளிநாட்டிலிருந்து தொடர்புக்கு 0094-74201582 (சி/4817)

## தவறிவிட்டது

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னம்மா பஞ்சலிங்கம் என்பவரின் தேசிய அடையாள அட்டையும், ( இல. 348352474 V ) கைப்பேர்ஸ் ஒன்றும் சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயது செய்து உரும்பிராய் தபாற் கந்தோருக்கு அனுப்பவும். (59174)

அரியாலைக்கும் மீசாலைக்கும் இடையில் (கண்டி வீதி) 10 – 09 –98 இல் மோட்டார் சைக்கிள் செயின் கவர்பாதி விழுந்துள்ளது. கண்டெடுத்தவர்கள் மு. இராசலிங்கம், ஐயா கடையடி மீசாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (59140)

## கண்டீர்களா!

பழுப்பு வெண்மை நிறமான ஒரு கொம்பு முறிந்த. வாலின் அரைப்பகுதி துண்டிக்கப்பட்ட ஜேசி இன கறவைப்பசு ஒன்று 11 - 9 - 98 வெள்ளிக்கிழமை முதல் 59, சிவன் புது வீதியிலிருந்து காணாமற் போய்விட்டது. அதைக் கண்டவர்கள் தயவு செய்து 59, சிவன் புதுவீதி, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (59178)

## மணப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான தொழிற் சாலையின் பங்காளியும் முகாமையாளரும் ரோகிணி நட்சத்திரம் வயது 38 கிரகபாவம் 20¼. செவ்வாய் தோஷமற்ற மணமகனுக்கு மணப்பெண் தேவை. தொடர்பு: கு. திருவிளங்கம், 3 ஆம் கட்டையடி, வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு. [59165]

## தட்டச்சு வேலைகள்

ஆய்வுக்கட்டுரைகள், உறுதிகள், வினாத்தாள்கள் முதலியவை தட்டச்சு றோணியோ வேலைகள் குறைந்த செலவில் செய்து தரப்படும். தொடர்பு: வே. பூபாலசிங்கம், ஐயா கடையடி, மீசாலை. [59139]

## திருத்துதல்

சகல கெமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, 'மேல்மாடி' கன்னாதிட்டிச் சந்திக்கு அண்மையில். (58982)

## சோதிடம்

வெளியூர் ஜெனன ஜாதக குறிப்புஎழுத, பலன் பார்க்க சிவம் சோதிடர், இல. 158, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (59108)

## SPOKEN ENGLISH

இலக்கணம் இன்றி சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. புதிய பிரிவு 15 – 09 – 98 11-00 A.m. 10 மாணவர்கள் மட்டும் அனுமதி. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

(59149)

## தக்காளி நாற்று

றோமாஇன தக்காளி நாற்றுக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அறவழி போராட்டக் குழு, கைதடி, நுணாவில் சாவகச்சேரி. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் பெறலாம். (59097)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 02 — 09 — 1957

உதிர்வு 15 — 08 — 1998

திருமதி

## சரோஜினிதேவி குலநாயகம்

(ஆசிரியை, அராலி கிழக்கு அ.மி. த. க. பாடசாலை)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எம்மவரது குடும்ப விளக்கான திருமதி சரோஜினிதேவி குலநாயகம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று (14 – 09 – 98) அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மற்றும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், ஏனைய வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்.

உப தபாற்கந்தோர் வீதி,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (59124)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 — 08 — 1922

மறைவு 26 — 08 — 1997

அமரர்

## ஆழ்வார் நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

காலத்தின் வேகமென்ன ஒலி ஒளி வேகமா?
ஓராண்டு வந்ததுவா? நம்ப முடியவில்லை
ஓராண்டு ஒரு கணமா? எனக்குப் புரியவில்லை
நெஞ்சு வெடிக்கிறது நேற்றுப்போல் இருக்கிறது
அன்பூட்டி அறிவென்னும் அமுதூட்டி அரவணைத்து
வையத்தில் வாழ்வாங்கு வாழவைத்த அப்பாவே!
பூத்துக் குலுங்கும் உங்கள் குலக்கொடிகள்
எங்கெங்கு படர்ந்தாலும் அங்கங்கு பாசமாய்
நினைந்து நெக்குருகி நினைவதனைக் கொண்டாடி
சாந்தி சாந்தியென்று சாந்திக்காய் சரணடைந்து
பகவானின் பாதத்தைப் பற்றியே போற்றுகின்றோம்.
பற்றற்றான் பாதத்தில் பதமுத்தி பெற்றிடுக!

— குடும்பத்தினர்

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (59112)

யா / நவாலி

## மகா வித்தியாலய மாபெரும் கலைவிழா ஒத்திவைப்பு

இன்று (14-09-98) நடைபெறவிருந்த மாபெரும் கலைவிழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். நன்றி.

அதிபர்,
(59177) யா/நவாலி மகா வித்தியாலயம்.

## குழந்தையேசுவுக்குநன்றி

''என்னை நீ அதிகமாக மகிமைப்படுத்தும் போதெல்லாம் உனக்கு அதிகமதிகமான என் ஆசிகளை அருளுவேன்'' எனப் பகர்ந்த யேசுவே! நான் கேட்ட போதெல்லாம் என்னையும் எனக்கு வேண்டியவர்களையும் குணப்படுத்தி தொடர்ந்தும் குணமாக்கிக்கொண்டே வருகின்ற உமது கருணைக்காக இதனை நன்றியுடன் பிரசுரிக்கின்றேன்.

குழந்தை யேசுவின் அடியாள்,

(சி/4842)

யா / திருக்குடும்பக் கன்னியர்மடம்

## கல்விக் கண்காட்சி 98

14 - 09 - 98, 15 - 09 - 98 ஆகிய இரு தினங்கள் நடைபெற இருந்த மேற்படி கண்காட்சி தவிர்க்கமுடியாத காரணத்தால் 15 09 – 98, 16 – 09 – 98 ஆகிய தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

– அதிபர்

(59181)

## கண்ணீர் அஞ்சலி

### சுப்பிரமணியம் பத்மநாதன்

(யாழ். மாநகரசபை உதவி ஆணையாளர்)

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குமாரு அருமைநாயகம்
குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரி வீதி (நாராயணன் வீதி),
கோண்டாவில், (59173)

## கண்ணீர் அஞ்சலி

11 - 09 - 1998 இல் முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்ற எதிர்பாராத குண்டு வெடிப்பில் அகால மரணத்தைத் தழுவிய எமது யாழ். மாநகர பிதா

**திரு. பொன். சிவபாலன்**

அவர்களுக்கும்

அவருடன் உயிரிழந்த

மாநகரசபை நிர்வாக உத்தியோகத்தரும் பதில் ஆணையாளரும் யாழ். மாநகர ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கப் பொருளாளருமாகிய

**திரு. சு. பத்மநாதன்**

அவர்களுக்கும்

மாநகரசபை மராமத்துப் பொறியியலாளர்

**திரு. மா. ஈஸ்வரம்**

அவர்களுக்கும்

மாநகரசபை கட்டடக் கலைஞர்

திருமதி

**மல்லிகா இராஜரட்ணம்**

அவர்களுக்கும்

மாநகரசபை ஆங்கில தட்டெழுத்தாளர்

**திரு. பொ. பத்மராஜா**

அவர்களுக்கும்

எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

மாநகரசபை ஆணையாளரும்,
பணியாளர்களும்.

(59182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக ஊழியரான முகமாலை
குடும்ப நல உத்தியோகத்தர்
**செல்வி செல்லன் விமலேஸ்வரியின்**
அன்புத் தந்தையார்

**அமரர் க. செல்லன்**

அவர்களின் மறைவையொட்டி வாடி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
சாவகச்சேரி.

(59077)

## தீ விபத்தில் பெண் மரணம்

யாழ்ப்பாணம், செப்: 14

உடல் முழுக்க தீப்பற்றி எரிந்த நிலையில் கடந்த 4ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம் பெண் ஒருவர் ஒரு வாரத்தின் பின் அங்கு மரணமானார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த பாலச்சந்திரன் சுகன்யா (வயது 18) என்ற வேம்படி மகளிர்கல்லூரி உயர் வகுப்பு மாணவியே உயிரிழந்தவராவார். சம்பவ தினம் இவர் உடுப்பு ஸ்திரிக்கை செய்வதற்காக, சிரட்டையில் மண்ணெண்ணெயை ஊற்றிப்பற்ற வைத்த தீயே குபீரென இவர் அணிந்திருந்த சட்டையில் பற்றி எரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 – 04 – 1925 | 15 – 08 – 1998 |

**அமரர் பூ. செல்லையா**
(கரம்பகம்)

நாய் போல நீயும் நடவாமல் ஓடி
நாலு ஐந்து பிள்ளைகளைப்பெற்று வளர்த்தாய்.
பல்கலைக் கழகம் செல்ல வைத்தாய்
பலதேசம் சென்று பார்க்க வைத்தாய்
உத்தியோகம் பார்க்க வைத்தாய்
ஊரெல்லாம் உன்னைப் புகழ வைத்தாய்
கார் கொண்டு வரமுன்னர் உன்னைக்
காலன் கொண்டு சென்று விட்டான்.
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
— நீயும் சந்நிதி
ஆற்றில் இன்று சங்கமம் ஆகிவிட்டாயே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்கு பற்றி எமக்கு உதவிய, ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் 14 — 9 — 98 திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரம்பகம்,
மிருசுவில்.

( C/4841 )

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, செப்: 14

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவையின் மாதாந்தவெளியீடான ஞானச்சுடர் புரட்டாதி இதழ் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியீட்டு வைக்கப்படும்.

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வின் போது இடம்பெறும் இவ்வெளியீட்டு விழாவில் இளைப்பாறிய ஆசிரியர் க. தங்கவடிவேல் இதழை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார். ஆய்வுரையை பிரபல எழுத்தாளர் தெனியான் நிகழ்த்துவார்.

(ஐ-173)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி, செப்: 14

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை "எங்குமாகி நின்றாய்" என்ற தலைப்பில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலய ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுக வுரையை பண்டிதர் க. முத்துவேலு நிகழ்த்துவார்.

[ஐ-173]

உ



யா/ நாயன்மார்கட்டு

## ஸ்ரீ இராசராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயத் திருப்பணி வேலைகள்

மேற்படி ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பெரும்மளவிலான திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. இத் திருப்பணி வேலைகள் நிறைவுற அம்பிகை அடியார்களின் நிதியுதவி வேண்டப்படுகிறது. நிதியுதவி புரிய விரும்புவோர் தயவு செய்து ஆலயத் திருப்பணிச் சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

ஷை ஆலய திருப்பணிச் சபையினர்

விளம்பர அன்பளிப்பு:
**காவேரி புடைவை மாளிகை**
இல. 48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(59158)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி
ஸ்ரீ மஹாமாரியம்பாள் தேவஸ்தான
பஞ்சகர்த்தா உறுப்பினரும்,
யாழ். மாநகரசபை நிர்வாக உத்தியோகத்தருமாகிய

**சுப்பிரமணியம் பத்மநாதன்**

அவர்கள் 11-09-98 வியாழக்கிழமை அகால மரணம் அடைந்தமையை முன்னிட்டு கலட்டி அம்மன் பரிபாலனசபை அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளின் திருவருளை வேண்டுகின்றது.

பரிபாலன சபை,
யாழ். வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி
ஸ்ரீ மஹாமாரியம்பாள் தேவஸ்தானம்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(59176)

உ
சிவமயம்

## விவாஹ சோபன வரவேற்பு உபசார அழைப்பு

அன்புடையீர்!

இணுவில் முருகப்பெருமான் திருவருளால்

இணுவில்
உருத்திரமூர்த்திக்குருக்கள்
தம்பதியரின் புதல்வன்
பிரம்மஸ்ரீ
**ஆதித்தசர்மா**
அவர்களுக்கும்

தெல்லிப்பழை
சி. ஸ்ரீதரசர்மா
தம்பதியரின் புதல்வி
செல்வி
**சுபத்திரா**
அவர்களுக்கும்

16 – 09 – 1998 புதன்கிழமை காலை திருமணம் நடைபெற்று அன்று மாலை 3 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பை ஏற்று வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

சுபம்.

சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள்,
ஸ்ரீரஞ்சனி தம்பதியினர்,
கந்தசுவாமி கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(59163)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் K. V. நற்குணம்**
(நாடகக் கலைஞர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 05 - 1923 | 06 - 09 - 1997 |

என்றும் நினைவுடன் வாழும்:

குடும்பத்தினர்.

இராஜகிராமம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(59151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41 ஆவது நாள்

# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் விக்டர் நீல்பிரீடன்

(விக்டறி சலூன் உரிமையாளர், மானிப்பாய்)

மலர்வு 18 - 05 - 1978

உதிர்வு 05 - 08 - 1998

ஆறுதல் சொல்ல ஆரிருந்தென்ன- உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன உன்
திருமுகம் பார்த்தால் போதாதோ?
நாள்கள் நாற்பத்தியொன்று ஆயிடினும்
பாசமது மாறாது!- உன்
நினைவுகளும் மறையாது
மீளாத் துயில் கொண்ட பாசக்குலக்
கொழுந்தே – உன்

ஆத்ம சாந்திக்காக இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி ஆறுதல் அடைகிறோம்.

எனது அன்புச் செல்வத்தின் மரணச் செய்தி கேட்டு துயர் அடைந்தவர்கள் தொலைபேசி மூலமும், நேரிலும் கலந்து கொண்டவர்கள் மற்றும் றீகல் சலூன் சிலாபம் உரிமையாளர் தேவராசா சகோதரன் குடும்பத்தினருக்கும்

மானிப்பாயில் திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுத்த பங்குக்குரு யூஜின் பிரான்ஸிஸ் ஏனைய குருக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்
தந்தை, தாய்,
சகோதரர்கள், சகோதரிகள்,
அம்மம்மா, மாமன்மார், மாமிமார்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
பெரியப்பா, உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

மெமோறியல் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(59137)

## மின் விநியோகம் தடை

அரியாலை, கொழும்புத்துறை பகுதிக்கான மின் தடைப்பட்டுள்ளது.

மாம்பழம் சந்தியில் உள்ள ஜெனரேற்றர் கடந்த சில நாள்களாக பழுதடைந்து இயங்காமல் இருப்பதே மின் விநியோகம் தடைப்பட்டதற்கு காரணம் எனத் தெரிய வருகிறது.

இந்த ஜெனரேற்றர் மூலமே அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. (ஐ-17)

## சமாதானம் பற்றிய சுவரொட்டிப் போட்டி

வலிகாமம் தெற்கு, செப். 14

சர்வதேச லயன் சங்கத்தினர் பாடசாலை மாணவர்களிடையே சமாதானம் பற்றிய சுவரொட்டிப் போட்டியினை நடாத்த உள்ளனர்.

இவ்வருடம் டிசம்பர்மாதம் முதலாம் திகதி அன்று 11 — 13 வயதுக்குட்பட்ட மாணவர்கள் இதில் பங்கு பற்றலாம்.

முதலாம் இடம் பெறுபவருக்கு 2 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பரிசுடன் குடும்ப அங்கத்தவர் இருவருடன் நியூயோர்க்கில் நடைபெறும் விசேட பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்படும்.

மேலும் 23 வெற்றியாளர்களுக்கு தலா 500 அமெரிக்க டொலர்கள் திறமைப் பரிசுகளும் வழங்கப்படும். (ஐ-152)

## மலசல கூடம் அமைக்க நிதி

யாழ்ப்பாணம், செப். 14

வளலாய், இடைக்காடு, தம்பாலை ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்ந்தோரின் சுகாதார வசதியை முன்விட்டு மலசல கூடங்கள் அமைப்பதற்கும், திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன்வந்துள்ளது.

இவர்களின் தேவைக்கேற்ப இதற்கு வேண்டிய நிதியைக் கோப்பாய் பிரதேச செயலர் அனுசரணையுடன் அது ஒதுக்கீடு செய்துள்ளது.

சுமார் 150 பேர் இதனால் பயனடையவுள்ளனர் எனப் பிரதேச செயலர் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## புதிய தொலைபேசிச் சேவை

லோட்டன் வீதி, மானிப்பாய்

(மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள சந்தியிலிருந்து வேலக்கைப்பிள்ளையார் கோவில் வீதியில் 100 யார் தூரம்)

தற்பொழுது வெளிநாட்டு தொலைபேசி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 070 - 212280
வெளிநாடு - 0094 - 70 - 212280

தொலைபேசிச் செய்திகள் அனுப்பிவைக்கப்படும்

(59175)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை பதவி வெற்றிடங்கள்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை 18—09—98 ஆம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ரூபா 50 செலுத்திப்பெற்று விண்ணப்பங்களை ''தலைவர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, நீதிமன்ற வீதி, மல்லாகம்'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 20 - 09 – 98 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பதவிப் பெயர்

1. எழுதுநர் தரம் II ''ஆ''
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் II ''ஆ''
3. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
4. நூலகர் தரம் III
5. தமிழ் தட்டெழுத்தாளர் தரம் II
6. தமிழ் சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர் தரம் II
7. ஆங்கில சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர் தரம் II

விண்ணப்பப் படிவத்துடன் தகைமைச்சான்றிதழ்களினதும், பிறப்புச் சான்றிதழ்களினதும் நிழற்படப் பிரதிகள் இணைத்தல் வேண்டும். சம்பளம், தகைமைகள் பற்றிய விவரங்களை எமது காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் வலி. வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- நீங்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கமே உங்கள் சுட்டெண் ஆகும். பரீட்சைக்கு வரும் பொழுது அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும்.

சு. ஸ்ரீபாஸ்கரன்
(தலைவர்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
14 - 09 - 1998.

(சி-4824)

உ


மருதடி குருமுருகன் துணை! ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!!

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 31 ஆம் நாள் (16 - 09 - 1998) புதன்கிழமை பிற்பகல் 01 மணி 40 நிமிடம் முதல் 03 மணி 36 நிமிடம் வரையுள்ள தனுசு லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவபாலன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பிறேமலதா**
அவர்களுக்கும்

மருதடி திருமுருகன் திருவருளால் திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் பருத்தித்துறை மருதடி முருகன் ஆலயத்தில் நடைபெற உள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!


திரு. திருமதி
பொ. எங்கரசு
பவளம்மா
அல்வாய் தெற்கு, மாலிசந்தி.

திரு. திருமதி
கி. சுந்தரலிங்கம்
(ஸ்ரீராம் [illegible])
[illegible] பூமணி
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

(59066)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 — 11 — 1959



இறைவன் திருவடியில் 14 — 09 — 1995

செல்வி

### அருந்தவமலர் வேலாயுதம்

( ரஜனி )

எங்கள் அருந்தவச் செல்வமே! ஆண்டு மூன்றானதம்மா! உம்மை எங்களால் ஒருகணப் பொழுதேனும் மறப்பதற்கில்லை, ஒளிவிட்டுப் பிரகாசிக்கும உமது திருமுகத்தைக் காண்பதற்கு உணர்விழந்து விழிநீர் சொரிந்து வாடுகின்றோம். உமது ஆத்மா சாந்தியடைய பெரியம்மா வீட்டிலிருந்து திருகோணமலை பத்திரகாளி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா,
பெரியம்மா குடும்பத்தினர்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு.

(59031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கேள்விக் குறியைத் தொடர விடாதீர்

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் எவரும் எதிர்பாராத ஒன்று. மக்கள் மட்டுமன்றிப் பாதுகாப்புப் பகுதியினரும் மாநகரசபை அலுவலகத்தில் திடீரெனக் குண்டு வெடிக்கும் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இந்தக் குண்டு வெடிப்பில் மேயர் சிவபாலனும் மாநகரசபையின் மூத்த அதிகாரிகள் நால்வரும் கொலையுண்டனர். மகாநாடொன்றில் கலந்து கொண்ட படை அதிகாரிகளும் கொலையுண்டனர்.

மாநாட்டில் கலந்து கொண்ட படை உயர் அதிகாரிகளை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதா அல்லது மேயரையும் அவரது உத்தியோகத்தர்களையும் இலக்கு வைத்து நடத்தப்பட்டதா அல்லது கூட்டாக இரு சாராருக்கும் இலக்கு வைக்கப்பட்டதா என்பது குறித்து உத்தியோகபூர்வமான முடிவு எதுவும் இப்பத்தி எழுதப்படும்வரை அறிவிக்கப்படவில்லை.

பதவியேற்றசுமார் இரண்டரை மாதங்களில் மேயர் சிவபாலன் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இதற்கு முன்னர் பதவி வகித்த மேயர் சரோஜினியும் கொலை செய்யப்பட்டிருந்தார். அதன் பின்பும் சிவபாலன் தமது உயிரை பணயம் வைத்து பதவி ஏற்றதற்கு அரசின் தூண்டுதலும் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆதலால் இவரின் கொலைக்கான பொறுப்பை அரசும் ஏற்கத்தான் வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று என்பது குடாநாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையானோரின் கருத்து. தேர்தல் நடைபெற்ற பின்னர் இத்தகைய நிகழ்வுகள் இடம்பெறக்கூடும் என்ற அச்சமும் இப்பகுதி மக்களிடையே தேர்தல் காலத்திலேயே நிலவியது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர் குடாநாட்டில் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்ற அரசின் அவசரச் செயற்பாட்டின் விளைவாகவும் இத்தகைய சம்பவங்களை நோக்க வேண்டும்.

பொதுவாகவே கொலைகளை மக்கள் விரும்புவதும் இல்லை; ஆதரிப்பதும் இல்லை ஆனால் அவற்றை ஊக்குவிக்கும் அரசியல் சூழ்நிலையே இங்கு தொடர்கிறது. உரிமைகளைப் பெறுவதற்கு முன்னுரிமையா ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு முன்னுரிமையா என்ற போட்டா போட்டித் தன்மை மாறும் வரைக்கும், அரசியல் சூழ்நிலை மாற்றப்படும் வரைக்கும் மக்கள் பாதுகாப்பு கேள்விக் குறியாகவே தொடரும். அந்தக் கேள்விக் குறியை அகற்றுவதற்கு மக்கள், அரசியற் தலைவர்கள் ஆகிய இருசாராரும் உழைக்க வேண்டும்.

மக்களைப் பொறுத்தவரையில் இன்றைய சூழ்நிலை மாறி அரசியல் விடிவு பிறக்கவேண்டும் என்றே விரும்புகிறார்கள். முன்னர் தாம் சிந்திய இரத்தத்தையும் கண்ணீரையும் அவர்கள் மறந்து விடவில்லை என்பதும் உணரப்பட வேண்டும்.

# கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்

# ஒரே இரவில் 4 வீடுகளில் கொள்ளை!

### நாய்களைக் கொன்ற பின் கைவரிசை

அரியாலை, செப். 14

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதிப் பகுதியில் நான்கு வீடுகளில் வெள்ளிக்கிழமை இரவு திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

வீடுகளில் நின்ற இரு வளர்ப்பு நாய்களை இரகசியமாகக் கொன்று விட்டு ஓடுகளைப் பிரித்து துணிகரமாக வீடுகளுக்குள் இறங்கி பெறுமதியான பல பொருள்களைச் சூறையாடியுள்ளனர்.

சைக்கிள்கள், சுவர் மணிக்கூடுகள், தங்க நகைகள், உடுபுடைவைகள் என்பன வேகளவாடப்பட்டுள்ளன.

இந்த நான்கு வீடுகளிலும் வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயமே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி மிகவும் தந்திரமாக பொருள்களைச் சூறையாடியுள்ளனர்.

இன்னொரு வீட்டில் அதிகாலை மூன்று மணிக்கு நேரம் குறிக்கப்பட்டு "அலாரம்" வைக்கப்பட்ட மேசை மணிக்கூட்டில் நேரத்தையும் காலை 6-30 மணிக்கு மாற்றிவிட்டுச் சென்றுள்ளனர். அத்துடன் வீட்டில் வளர்க்கப்பட்ட பொமனேரியன் நாய்க்குட்டியையும் விட்டு வைக்காமல் அதையும் கொண்டு சென்றுள்ளனர். (ஐ-17)

# பஸ் சேவை அடிக்கடி சீர்குலைவு

தென்மராட்சி, செப். 14

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் 769 இலக்க மார்க்க பஸ் சேவையில் ஈடுபடும் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதால் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பலமைல்கள் தூரம் நடந்து செல்லும் அவல நிலை ஏற்படுகிறது.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து அதிக அளவு தூர பஸ் சேவை எனக் கருதப்படும் தாளையடி, பளை ஆகிய இடங்களுக்கு சேவையிலீடுபடுத்தப்படும் பஸ்கள் இடைவழியில் ஏதோ ஒரு பழுது காரணமாக வீதியில் நிற்பதால் மாற்று ஒழுங்குகள் இல்லாத நிலையில் பயணிகள் நடந்தே தமது வீடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

[ஐ-117]

# வலி. தெற்குப் பகுதியில் 4 கடைகளில் திருட்டு

சுன்னாகம், செப். 14

வலிகாமம் தெற்குப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் கடந்த சில நாள்களாக அதிகரித்து உள்ளன.

இப்பகுதியில் கூட்டுறவுச் சங்கக் கடையொன்று உட்பட நான்கு கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

ஏழாலையிலுள்ள சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 22 ஆம் கிளை கடந்த ஞாயிறன்று இருளும் வேளையில் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இரவுக் காவலாளி அவ்விடத்துக்கு வந்ததைத் தொடர்ந்து திருடர்கள் ஓடி விட்டதாகவும் இக்கிளையிலிருந்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை —

குப்பிளான் பகுதியில் ஒன்றும், சுன்னாகம் ஐயனார் கோயிலடியில் இரண்டுமாக மூன்று தனியார் வர்த்தக நிலையங்களும் இரவு வேளையில் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சுன்னாகம் தெற்குப் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் வீட்டார் விழித்துக்கொள்ளவே, வெளியிலிருந்த நீரிறைக்கும் பைப்பைத் தூக்கிக் கொண்டு தப்பியோடிவிட்டனர்.

இப்பகுதியில் மூன்று இடங்களில் தேங்காய்த் திருட்டும் இடம்பெற்றுள்ளது.

இரவு வேளை ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையைப் பயன்படுத்தி இத்திருட்டுக்கள் இடம்பெறுவதாகவும்,

இதனால் அச்சத்துடன் பொழுதைக் கழிக்கவேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-27

# அண்ணன் தம்பி அடிதடி

யாழ்ப்பாணம், செப். 14

அண்ணன் தம்பிக்கிடையில் இருந்து வந்த பணக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை கத்தி வெட்டில் முடிவடைந்தது.

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆசீர்வாதம் கிறிஸ்துராசா (வயது 48) என்பவரே வெட்டுக்கிலக்காகிப் படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# கிராமச்சங்கம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, செப். 14

பளை தர்மக்கேணி கிராமிய அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. (ஐ-117)

# உள்ளூராட்சி அபி. வேலைகளுக்கு 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம். செப். 14

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென வட பகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை 60 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இந்த நிதி யாழ்ப்பாண அரச அதிபரால் உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகத்திற்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் இந்த நிதி விரைவில் பகிட்டு வழங்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள வீதிகள், பொதுச் சந்தைகள், பொதுக்கிணறுகள் என்பன திருத்தி மீளமைக்கப்படுவதற்கும் ஆயுர்வேத வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கென வட பகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையால் வழங்கப்படும் நிதியுதவியில் இது இரண்டாம் கட்டமாகும். ஏற்கனவே 9 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள 60 லட்சம் ரூபா நிதியுதவியில் வேலணை பிரதேச சபைக்கு 9 லட்சம் ரூபாவும்- ஏனைய 15 உள்ளூராட்சி சபைகளுக்கும் தலா 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (ஐ-6)

# மந்திகையில் 'ஈ.சீ.ஜி.' பிரிவு நீண்டகாலம் செயலிழப்பு

மந்திகை மருத்துவமனையில் வைத்திய சேவைக்கு அவசியமான இதயத் துடிப்பு அளிக்கும் (ஈ சீ ஜி.) சேவைப் பிரிவு செயலிழந்துள்ளது.

நோயாளர்கள் இதற்கென யாழ். போதனா வைத்தியசாலையையே நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பாவனையில் இருந்துவந்த ஒரே ஈ. சீ. ஜி. இயந்திரம் நீண்ட காலமாகத் திருத்த முடியாத நிலையில் இருப்பதே இதற்கான காரணமாகும்.

கடந்த முப்பது வருடங்களுக்கு முன் பாவனையில் இருந்து வந்த இந்த ஈ சீ ஜி. இயந்திரம் கடந்த ஒரு சில ஆண்டுகளாக பழுதடைந்து திருத்தமுடியாத நிலையில் உள்ளது. இது பற்றி பல் தடவை, உரிய இடத்தில தொடர்புகொண்ட போதிலும் எந்தப்பலனும் கிட்டவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகாலங்கட்கு முன் ஈ சீ. ஜி. இயந்திரமிருந்தும், அதனை இயக்குவதற்கு ஒரு ஈ. சீ. ஜி. தொழில் நுட்பவியலாளர் இன்றி இப்பிரிவு செயலிழந்து இருந்தது. பின்னர் கடந்த இரண்டு வருடங்களுக்குமுன் ஈ. சீ. ஜி. தொழில் நுட்பவியலாளா ஒருவர் நியமிக்கப்பட்டார். (ஐ-15)

### நாளை

ஆவணி - 30

செவ்வாய்க்கிழமை

திதி: தசமி

முன்இரவு 09.06 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

காலை 06.18 வரை.

புனர் பூசம்

காலை 06.00 வரை

சுபநேரம்: 10.33 -12.03

ராகுகாலம்: 03.03 - 04.33

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

உணர்ச்சிகள் அடக்கி ஆளப்பட வேண்டியவைகள். அவைகளோடு நியாயம் பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

— இ. ஸ்டேன்லி ஜேனஸ்

# வடகொரிய-அமெரிக்க பேச்சில் முன்னேற்றம்

### ஒப்பந்தம் ஏற்படலாம்

நியூயோர்க், செப். 12

நியூயோர்க்கில் அமெரிக்க அதிகாரிகளுக்கும் வட கொரிய அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் அளவில் முந்திய அணு ஆயுதம் தொடர்பான பேச்சில் இணக்கம் ஒன்று ஏற்படலாம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பமான இப்பேச்சுக்களில் வட கொரியத் தூதுக்குழுவுக்கு உதவி வெளிவிவகார அமைச்சர் கிம் கைகொவான் தலைமை வகிக்கிறார். அமெரிக்க குழுவுக்கு சார்ஸ் கார்ட்மர் தலைமை வகிக்கிறார்

# ஒஸாமா பின் லாடனின் வீட்டுக்காவல் செய்தி; தலிபான் மறுப்பு!

காபூல், செப் 14

சவுதி கோடீஸ்வரர் ஒஸாமா பின்லாடன் ஆப்கானிஸ்தானில் வீட்டுக் காவலில வைக்கப்பட்டிருப்பதாக வெளியாகிய செய்திகளை தலிபான் அமைப்பு மறுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஒஸாமாவின் நடமாட்டத்துக்கு எந்த விதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என்றும் —

எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான அரசியல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் எனஅவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் —

ஒஸாமா பின்லாடன் எவரிடமும் ஒப்படைக்கப்படமாட்டார் என்றும் —

தலிபான் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு ஆப்கானிஸ்தானில் கண்டகர் என்ற இடத்தில் ஒஸாமா தலிபான்களால் வீட்டுக்காவலில வைக்கப்பட்டிருப்பதாக லண்டனில் வெளியாகும் அரபுப் பத்திரிகை ஒன்றில் தகவல் வெளியாகியிருந்தது. (ஐ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் பேச்சு நடத்தும் முயற்சி; சமாதான விரும்பிகள் வரவேற்பர்

## ஐ.நா. இளைஞர், மாணவர் அமைப்பு அறிக்கை

கொழும்பு, செப். 14

ஐக்கிய தேசியக் கட்சி நியமன நாடாளுமன்ற உறுப்பினரான ஜயலத் ஜெயவர்த்தனா தற்போதைய நெருக்கடியான பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியதாக அண்மையில் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன.

உண்மையில் அவ்வாறான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருப்பின் அது குறித்து நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இப்போது நடைபெற்று வரும் தேவையற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சமாதானம் ஒன்று தான் வழி. ஆகையினால் ஜயலத் ஜெயவர்த்தனாவின் முயற்சி இலங்கையில் உள்ள இளைஞர்கள் எல்லோராலும் பாராட்டப்படும்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் இளைஞர், மாணவர் அமைப்பு சார்பில் அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஸ்ரீ லால் சுல்தெர வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமக்குத் தேவை சமாதானம்; ஆனால் அதனை போரின் மூலம் எந்தவொரு காலத்திலும் பெறமுடியாது. போருக்கு எதிராக நின்று சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு பாடுபட வேண்டியது ஒவ்வொரு இளைஞரதும் கடமையாகும்.

போரால் அழிவு ஏற்படுமேயன்றி வேறு ஒன்றும் ஏற்படப் போவதில்லை. எந்தவொரு முக்கிய தேவையும் இன்றி எண்ணிலடங்காத மக்கள் இந்தப் போரினால் இறந்து கொண்டிருக்கின்றார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய சமாதான வழியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதுதான் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரே வழி. அவ்வாறு செய்தால் யுத்த தேசமாக மாறி இருக்கும் இலங்கை சமாதான பூமியாக மாறும்.

ஐ. தே. கட்சி ஆட்சியில் இருந்த சில வருட காலங்களுக்கு முன்னர் அப்போது இளைஞர் தலைவராக இருந்த விஜயகுமாரதுங்கவும் ஒஸி அபயசேகராவும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது அந்தச் செயல்களுக்கு நாம் அஞ்சலி செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி என்ற வகையில் எல்லோரும் ஒன்று சேர்ந்து அர்த்தமற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பாடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

போரை நிறுத்தி இந்த நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு முன் வரும் எந்த ஓர் அரசியல் தலைவர் அல்லது பிரதிநிதிக்கும் எமது முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கையின் சனத்தொகையில் 65 சதவீதமானவர்கள் இளைஞர்களாவர். இப்போது பலவித கஷ்டங்களை அனுபவிப்பவர்களும் இளைஞர்களே.

ஆகையால் போர் வேண்டாம் சமாதானமே வேண்டும் என்னும் குறிக்கோளுக்காக உழைப்பதற்கு இந்த நாட்டு இளைஞர்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

— என்று அந்த அறிக்கையில் கலாநிதி ஸ்ரீ லால் கல்தெர மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

## அபிவிருத்தி சங்கங்கள் பதிவு

தென்மராட்சி, செப். 14

வடக்கு - கிழக்குப் பகுதியில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் அனைத்தும் வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டதையடுத்து யாழ். குடாநாட்டில் சங்கங்களின் புனரமைப்புப் பணிகள் அந்தந்தப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்த சங்கங்களும் தற்போது புனரமைக்கப்பட்டு விவரங்கள் பதிவுக்காக அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

---

கூட்டுறவுச் சேவையிலிருந்து ஓய்வு பெறுபவரை

## வாழ்த்துகின்றோம்



### திரு. தி. செல்லத்துரை

(களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். பலநோ. கூ. ச.)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த 37 வருடங்களாக சங்கத்திற்குப் பெரும் சேவையாற்றி, நாளை 15 – 09 – 1998 அன்று ஓய்வு பெறும் களஞ்சியப் பொறுப்பாளர் திரு. தி. செல்லத்துரை அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்தும்!

★ சி. திருநாவுக்கரசு ★ இ. பற்குணநாதன்
★ சூ. நீக்கிலாப்பிள்ளை ★ சு. நீதிராஜா
★ பா. நந்தகுமார் ★ ச. சதீஸ்குமார்
★ கே. காந்தரூபன்.

சங்க ஊழியர்கள்.

(சி/4856)

---

## கண்ணீர் அஞ்சலி

### சுப்பிரமணியம் பத்மநாதன்

(உதவி ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் யா. மா. ந. சபை)

ஆலயத் தொண்டுகளில் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து விநாயகரின் பாதாரவிந்தங்களைச் சென்றடைந்த அமரர் பத்மநாதனின் ஆன்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ து. விவேகாநந்தக் குருக்கள்
(யாழ்/ கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம்)

(59184)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். நகர மேயரும்
தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருமான

### பொ. சிவபாலன்

அவர்களது அகால மரணத்தையிட்டு வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவரும், உறுப்பினர்களும், காரியாலய ஊழியர்களும் ஆகிய நாங்கள் எமது இதய அஞ்சலியை ஆழ்ந்த அனுதாபத்துடன் தெரிவிக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
காரியாலய ஊழியர்கள்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை.

[சி/4868]

---

# தென்னை நோய் பற்றிய விளக்கக் கருத்தரங்கு

தென்மராட்சி மேற்கில் உள்ள மறவன்புலோ, தனங்கிளப்பு, கோவிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் தென்னை மரங்களில் நோய் ஏற்பட்டு மரங்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நோய்களைக் கட்டுப்படுத்தவும், தென்னை வளர்ப்பு முறைகள் பற்றிய கருத்தரங்கும் வீடியோ விளக்கப்படக் காட்சியும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு மறவன்புலோ கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

வடபகுதி தென்னைவள ஆராய்ச்சி அபிவிருத்தி அலுவலர் கே. சத்தியேந்திரா இதில் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளார். இப்பகுதி மக்களைக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மறவன்புலோ விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மா. லீலாவினோதன் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

# எதிர்வரும் சனியன்று போலியோ சொட்டு மருந்து

தென்மராட்சி, செப். 14

தேசிய நோய்த் தடுப்புத் தினமான செப்ரெம்பர் 19 ஆம் திகதி யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

யுனிசெப் நிறுவனமும், யாழ். குடாநாட்டில் உள்ள லயன்ஸ் கழகங்களும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்து ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கவுள்ளன.

குடாநாட்டில் உள்ள பின்வரும் லயன்ஸ் கழகங்கள் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் சொட்டு மருந்து வழங்குவதற்கான உதவிகளை வழங்கவுள்ளன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வடமராட்சி லயன்ஸ் கழகமும், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகமும், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நல்லூர் லயன்ஸ் கழகமும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கொக்குவில், கோப்பாய் ஆகிய லயன்ஸ்கழகங்களும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகமும், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மானிப்பாய் பரிஷ், மானிப்பாய் வட்டம் ஆகிய லயன்ஸ் கழகங்களும் சொட்டுமருந்து வழங்கும் நிகழ்வுக்கு உதவிகளை வழங்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

---

## மரண அறிவித்தல்கள்

### நாகேந்திரம் மகேஸ்வரி

(கட்டுவன்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பைப் புகுந்த இடமாகவும், தற்போது மல்லாகம் சோடாக் கொம்பனி வீதியில் வசித்தவருமாகிய நா. மகேஸ்வரி அவர்கள் 13-09-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முருகேசு பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து சின்னம்மாவின் ஆசை மருமகளும், நாகேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற வாமதேவன், தனபாலசிங்கம், (திருகோணமலை), நகுலேஸ்வரி (கனடா), இராஜசிங்கம் (கண்ணன் - முன்னாள் இ. போ. ச. ஊழியர்), பரமேஸ்வரி (கனடா) மங்களேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14 – 09 – 98 திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் மல்லாகம் அலுக்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. இராஜசிங்கம்
(கண்ணன்)
சகோதரன்

சோடாக் கொம்பனி ஒழுங்கை,
KKS. றோட், மல்லாகம்.

(59183)

### பெனடிக்ற் வின்சென்ற்

யாழ்ப்பாணம் றக்கா வீதியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக்ற் வின்சென்ற் [முன்னாள் மக்கள் வங்கி உத்தியோகத்தர்] 12 - 09 - 98 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற பெனடிக்ற் இராசையா திருமதி சிசிலியா பெனடிக்ற் ஆகியோரின் அருமை மகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும் றமிலா, கொலின்ஸ் [கனடா] ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜேம்சன் அரசகேசரி [விவசாய ஆராய்ச்சியாளர், அநுராதபுரம்] அவர்களின் அன்பு மாமனாரும், ஜொகான்சன், அமலியா றேச்சர் ஆகியோரின் அன்புப் பேரனும், ஊர்த்து காலஞ்சென்ற டனிசியஸ் சின்னத்தம்பி மற்றும் கெலன், மனுவல் [பிரான்ஸ்] ராஜேஸ், தாசன், அல்வின் [பிரான்ஸ்], யசிந்தா [பிரான்ஸ்] காலஞ்சென்ற றூபா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயராஜா, [கனடா] பவளமலர், புஸ்பராஜா [கனடா] ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் நல்லடக்கம் 13 – 09 –98 இல் உடுவிலில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வின்சென்ற் புஸ்பமலர்
[மனைவி]

நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

[59179]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருடை கிடைக்கவில்லை

வன்னிப் பகுதியிலிருந்து வந்து பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இலவச சீருடைத் துணிகள் வழங்கப்படவில்லை என பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கோட்டக் கல்வி அலுவலர்களிடம் விசாரித்தபோது இலவச சீருடைக்கான மாணவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாத மாணவர்களுக்கே சீருடைத் துணிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

# 'கெயர்' உதவி

சுன்னாகம், செப். 14

சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனத்துக்கு சர்வதேச 'கெயர்' நிறுவனம் 5 நீரிறைக்கும் இயந்திரங்களையும், அல்கதீன் பைப்புகளையும் இலவசமாக வழங்கியுள்ளது.

சுன்னாகம் தெற்கு கிராம சேவகரும் மேற்படி சம்மேளனமும் இணைந்து தயாரித்த திட்டத்தின் அடிப்படையில் 'கெயர்' நிறுவனம் இவ்வுதவியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டம், வீட்டுத்தோட்டம் ஆகிய இரண்டிலும் ஈடுபடும் ஐந்து பெண் பயனாளிகளுக்கு சம்மேளனம் இவற்றைச் சலுகை விலைக்கு வழங்கி உள்ளது.

சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் 'கெயர்' திட்ட முகாமையாளர் ஏ. அருள்ஞானம் இவற்றை உரியவர்களிடம் கையளித்தார்.

(ஐ-27)

# வாழைமரங்கள் அழிவு

கடந்த சில நாள்களாக வீசிய கடுங்காற்று விவசாயிகளுக்குப்பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

உரும்பிராய், ஊரெழு, நீர்வேலி ஆகிய பகுதிகளில் வாழைமரங்கள் குலைகளுடன் முறிந்து வீழ்ந்துள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் பத்மநாதன்

(நிர்வாக உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை)

கொக்குவில் பொற்பதியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை கிழக்கு கஸ்ட்டியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பதமநாதன் (11-9-98) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் ஏக புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரேந்திரன (ஜேர்மனி), சிவேந்திரன் (கனடா), குமரேந்திரன் (கனடா), மயூரதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜனப்பிரியாவின் (ஜேர்மனி), அன்பு மாமனாரும், இந்திராதேவி, கமலாதேவி, வாமதேவி (கனடா), சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் அருளம்பலம், பரராஜசிங்கம் (கனடா), பரமானந்தம், அம்பலவாணர், தியாகராஜா, சண்முகலிங்கம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-9-98) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

திருமதி ப. பத்மநாதன்

185/5. (59), பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(59144)

## அ. ஞானமூர்த்தி

(இளைப்பாறிய ஆசிரியர்)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட அ. ஞானமூர்த்தி 11-09-98 வெள்ளிக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் திருமதி தங்கமணியின் (இந்தியா) அன்புக் கணவரும், ரேவதி, சத்தியமூர்த்தி, தேவகி (மூவரும் கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசமூர்த்தி (கனடா), புஸ்பமலர் (கனடா) ஆகியோரின் மாமனும், சுஜபிரசாத், கிசிப்பிரசாத், அருண்பிரசாத், ஆரணி (அனைவரும் கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற றிஜிஸ்ரார் தம்பு, தையல்பாகர் (டாக்டர்—இந்தியா), காலஞ்சென்ற ஆங்கில ஆசிரியை பொன்னம்மா, காலஞ்சென்ற அன்னலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும், வீரகுணசிங்கத்தின் (இந்தியா) பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சென்னை K. K. நகரிலுள்ள மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:

இ. ஐ. சிவசுப்பிரமணியம்

123, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(59190)

## பொன்னையா தம்பிராசா

(அப்பையா)

(முன்னாள் தலைவர்,
வீரபத்திரர் கோயில் கல்வியங்காடு)

கல்வியங்காடு புலவனார் வீதியைச் சேர்ந்தவரும், கல்வியங்காடு வீரபத்திரர் கோயில் முன்னாள் தலைவருமான பொன்னையா தம்பிராசா (அப்பையா) 13-09-98 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் தனகுணவதியின் (சரோ) அன்புக் கணவரும், திருமதி பா. வசந்தமலர் (கனடா), வசந்தராசா (வெள்ளை—ஜேர்மனி), வரதராஜா (வவா—கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ந. பாலசுப்பிரமணியம் (கனடா), பிரபரூடா (ஜேர்மனி), பாக்கியலக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனடாவைச்சேர்ந்தவர்களான எஸ். மேகவர்ணன், நந்தினி, நவாயினி, நந்ததாஸ், நிர்மலதாஸ், டிவானி, டிலக்ஸன், ஜேர்மனியைச் சேர்ந்தவர்களான கவிதா, வினோத், வதனன், கல்வியங்காட்டைச் சேர்ந்த சுலக்ஷன், திலக்ஷன், வரலக்ஷன் ஆகியோரின் அன்புப்பேரனும், அபர்ணனின் (கனடா) பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-09-98) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பகல் 12 மணிக்கு திருநெல்வேலி இந்து (செம்பாடு) மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!

த. தனகுணவதி (சரோ)
(மனைவி)

வ. பாக்கியலக்ஷ்மி (மகள்)
(மருமகள்)

வீரபத்திரர் ஒழுங்கை,
கல்வியங்காடு.

(59188)

# சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி, செப். 14

ஐ. நா. அபிவிருத்தித்திட்டப் பிரிவினர் கண்டி கொட்டகலையில் சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சிப் பட்டறையை இம் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரை நடத்தவுள்ளனர்.

இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள யாழ். குடாநாட்டுப்பிரதேசசெயலகங்களில் கடமையாற்றும் ஏழு கிராமிய அபிவிருத்தி அலுவலர்களும், ஏழு சனசமூக நிலைய அலுவலர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று

விஜயகாந்த் - ராம்கி
நிரோசா நடித்த
செந்தூரப்பூவே

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)

Tele. No. 070-212228

(59037)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

ரஜனி, மீனா
நடித்த
முத்து
(கடைசி வாரம்)

18 ஆம் திகதி முதல்
அமைதிப்படை
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.

இன்று

சரத்குமார் (இருவேடம்)
விஜயகுமார் - குஷ்பு
மீனா, மனோரமா
கபாலி, கவுண்டமணி
நடித்த
நாட்டாமை

(சி/4778)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

கமல் (இருவேடம்)
சுகன்யா நடித்த
இந்தியன்
(ரீஸ்)
(கடைசி வாரம்)

காட்சி: 10-30, 2-30

(59166)


# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

அமரர் கு. அமிர்தலிங்கதுரை

( கு. வி. அச்சக உரிமையாளர் )

அன்னாரின் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகள் அவரது இல்லத்தில் 14-09-98 இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

— பிள்ளைகள்.

386, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(59186)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 04 | | 15 |
| — | | — |
| 05 |  | 08 |
| — | | — |
| 1941 | | 1998 |

## அமரர் நடேசு மனோகரன்

(இராசு)

(துறைமுக வெளிக்கள உத்தியோகத்தர் (W F O.), உணவுத்திணைக்களம், செயலகம், யாழ்ப்பாணம்)

அன்பின் திருவுருவாய் அகத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (14-9-98) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி, மகன், குடும்பத்தினர்.

72, குறோசெட் லேன்,
சுண்டிக்குளி.

(59189)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை மோகன்தாஸ்

(யாழ். தலைமையக பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவன்)

மாகியம்பதி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு மருதானையில் வசித்தவருமாகிய கிருஷ்ணபிள்ளை மோகன்தாஸ் 11—09—98 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கிருஷ்ணபிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், ரதியின் அன்புக் கணவரும், கொழும்பு இராமநாதன் கல்லூரி மாணவர்களான தனுஜா, அனுஜா, புனித ஜோசப் கல்லூரி மாணவர்களான கார்த்திக், சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், விஜயரத்தினம் (இரசாயனவியலாளர், ஆஸ்திரேலியா), சிறீனிவாசன் (உதவி நில அளவை அத்தியட்சகர்), பாலசுப்பிரமணியன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), திருமதி விஜயலட்சுமி சிவசாமி, திருமதி ஜெயலட்சுமி சரவணபவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவசாமி, சரவணபவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-09-98) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்!

இலட்சுமணர் ஓங்காரமூர்த்தி (மைத்துனர்)
(உப அதிபர், யாழ். மத்திய கல்லூரி)

சுப்பையாபிள்ளை சுத்தானந்தன்
(சகோதரர்)

C 5, பொலீஸ் விடுதி,
மருதானை.

(59187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபாலனின் இறுதிச்—

(முதலாம் பக்கத் தொடர்)
வும்—

மாநகரசபை ஊழியர்களை முதல்வரின் வாசஸ்தலத்துக்கு வந்து அஞ்சலி செலுத்தும்படியும்— கேட்கப்பட்டுள்ளது.

மேயரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நகரில் வாழைகள், தோரணங்கள் மற்றும் கறுப்புக் கொடிகள் கட்டப் பட்டுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் ஒலிபெருக்கி மூலம் சோக கீதம் இசைக்கப்பட்டது.

அதேவேளை - சித்தன் கேணியில் நேற்று வைக்கப் பட்டிருந்த அவரது பூதவுடலுக்கு ஏராளமானவர்கள் அஞ்சலிசெலுத்தினர்.

(இ-3-6-15-139-173-175)


# மோட்டார் சைக்கிள்

வாங்க விரும்புபவர்களுக்கு
**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி
தெரிவு செய்யக் கூடிய வகையில் வகை வகையான
தரமான கண்கவரும் மோட்டார் சைக்கிள்கள்
தற்சமயம் விற்பனைக்காக உள்ளன.

விஷேட கழிவுடன் பெற்றுக்கொள்ள

இன்றே வாரீர்!

◀▶ MD 90 - 50 கொண்டா
◀▶ V 90 - 50 யமகா
◀▶ C 90 - 50 சுப்பர்கப்
◀▶ CD 90 - 50 கொண்டா
◀▶ கஷ்ரம் 90 - 50 லான்சர்
◀▶ சாலி - 50

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**
171, K. K. S. வீதி,
யாழ்நகர்.

Tel: 2332 (59185)

2 ஆவது புதிய பிரிவு

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR

Lectures by:-
**Mr. M.A. HARI**

ஆரம்பம்:- 16-09-98 புதன் மாலை 4 மணி

Monday
Wednesday ] 4.00 p.m. — 5.00 p.m.

★ அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

**Navalar Education Centre**
Anaipanthy, Jaffna.
(59180)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத் தலைவர்
(பத்திரகாளி கோயில் தேவஸ்தானம்)



**சு. பத்மநாதன்**

(பதில் ஆணையாளர்,
நிர்வாக உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை)

அன்னாரது அகால மறைவை ஒட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பத்திரகாளி அம்மனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

பத்திரகாளி அம்மன் கோயில்
வழிபடுவோர் சங்கத்தினர்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (சி/4867)


# ஜனாதிபதித் தேர்தல்
# 99 மார்ச் முற்பகுதியில்?

கொழும்பு, செப். 14

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருடம் மார்ச்மாதம் 3 ஆம் திகதி நடத்தக் கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் நடத்தப்பட வேண்டிய காலத்துக்கு முன் — அதாவது 20மாதங்களுக்கு முன் — தேர்தல் நடத்தப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் மற்றும் சோதிட நிலையைக்கருத்தில்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம் எனக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தேர்தல்களுக்கான பிரசார வேலைகளில் இரு பெரும் கட்சிகளும்தீவிரமாக இறங்கியுள்ளன என்றும் —

இம்மாத இறுதியில் ஐ.நா. சபைக் கூட்டத் தொடரில் பங்குபற்றச் செல்வதால் ஜனாதிபதி தமது தேர்தல் பிரசாரப் பணியை நிறுத்தியுள்ளார் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை — மாகாண சபைத் தேர்தல்கள் ஜனவரி மாதத்தில் நடத்தப்படலாம் என்று மற்றொரு தகவலும் வெளியாகியுள்ளது.

### மாநகர சபை...

(முதலாம் பக்கத் தொடர்)
பட்டு கீழ் காணும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ கடமை நேரத்தில் படுகொலை செய்யப்பட்ட மாநகர சபை முதல்வர் மற்றும் ஊழியர்களினதும் இறுதிச் சடங்குச்செலவுக்கென மாநகரசபை நிதி நிலைமைக்கேற்பவும், சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் நிதி ஒதுக்குதல்.

★ படுகொலை செய்யப்பட்ட முதல்வரதும், ஊழியர்களதும் குடும்பங்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் தொடர்பு கொண்டு காலதாமதமின்றி நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ காயமடைந்தவர்களின் நலன்களைக் கவனிக்கவென குழு ஒன்று அமைக்கப்பட்டது.

★ இடிந்த கட்டடத்தில் இருந்து உடைமைகளை மீட்கும் விடயத்தைச் செயற்படுத்துவதற்கென உயர் மட்டக் குழு அமைத்து, அதற்கு விசேட அனுமதி பெறுவது.

★ மாநகர சபையின் நிர்வாக நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென விசேட ஏற்பாடு செய்தல்.

(இ-3-6-173)


எமது
புதிய வெளியீடு!
ராமராஜனின்
**அண்ணன்**
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/4870)

Jaffna, Sri Lanka
INSTITUTE OF INFORMATICS STUDIES

## வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலுள்ள எமது தலைமைக் காரியாலயத்துக்கும், சாவகச்சேரியில் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட இருக்கும் எமது கிளை நிறுவனத்துக்கும் இரவு நேர காவலாளிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இத் தொழிலில் முன் அனுபவம் உள்ளவரும் 50 வயதுக்குட்பட்டவரும் 15-09-98 (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

Managing Director,
**I. I. S.**
No. 68,
Clock Tower Road,
Jaffna.
(சி/4869)


## திருமலையில் துக்கதினம்

திருகோணமலை நகராட்சி மன்றத்தால் அமைக்கப்பட்ட நவீன சந்தையைத் திறக்க முயற்சி எடுக்கப்பட்டமையின் ஓராண்டுப் பூர்த்தி தினமான நேற்றுத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று விடுமுறை நாளாக இருந்த போதும், உணவுச் சாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

கறுப்புப் பட்டிகளைச் சகலரும் அணிந்திருந்தனர்.

நகராட்சித் தலைவர் சூரியமூர்த்தி கறுப்பு உடை அணிந்து நகரை வலம் வந்தார்.

இந்தத் துக்கதினத்தை யொட்டி நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது. (இ-3)

### நிபந்தனையுடன் பேச
## புலிகளுக்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பினார்
### ரணில் கூறுகிறார்

கொழும்பு, செப். 14

நிபந்தனையுடனான பேச்சை நடத்தத்தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்து விசேட தூதுவர் மூலம் ஜனாதிபதி விடுதலைப் புலிகளுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் என்று நம்பிக்கையான தகவல் மூலம் தமக்குத் தெரிய வந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, "சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஐ. தே. க. ஆதரவாக இருக்கும் என்றும் —

இது தொடர்பாக பிரிட்டிஷ் முன்னாள் அமைச்சர் லியம்பொக்ஸ் மூலம் ஏற்பட்ட உடன்படிக்கையை மீள நடைமுறைப்படுத்தவும் தாம் தயார் என்றும் - ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (இ-3)

## ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தனி ஈழம்தான் தீர்வு
### கோபாலசாமி தெரிவிப்பு

சென்னை, செப். 14

"தனி ஈழம் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு என்பது என்னுடைய அபிப்பிராயம்."

இப்படி மறுமலர்ச்சி தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சென்னையில் நடத்தவுள்ள பேரணி குறித்து கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில் —

பிரதமர் வாஜ்பாயைச் சங்கடப்படுத்தக்கூடாது என்பதற்காகப் பேரணியில் ஈழத் தமிழர் தொடர்பான கோஷங்களை எழுப்புவதைத் தவிர்ப்பது என்று முடிவாகி இருப்பதாக வெளியான செய்தியில் உண்மை எதுவும் இல்லை. இந்தப் பேரணியில் பொருத்தமான கோஷங்களை எழுப்ப உள்ளோம்.

இலங்கையில் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர். இதனால் தனி ஈழம்தான் இலங்கைத் தமிழர்பிரச்சினைக்குத் தீர்வு என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து என்றார். (இ-10-3)

### மலகூடம் அமைப்பு

தென்மராட்சி, செப். 14

'யுனிசெவ்' நிறுவனத்தினரால் பளைப் பிரதேசத்தில் உள்ள செல்வபுரம், கச்சார் வெளி ஆகிய இடங்களில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பத்துக் குடும்பங்களுக்கு மலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மலகூடங்கள் அமைப்பதற்கான உபகரணங்கள் தற்போது வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

### ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இத்தாக்குதலில் இரு விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(இ-3-6)

### செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

மூலம் பெறப்பட்டதைத் தொடர்ந்து இவர் விடுவிக்கப்பட்டார்.

கிஷோர் முன்பும் இரகசியப் பொலீஸாருக்கு வாக்கு மூலம் அளித்திருந்தார்.

(இ-3-164)

### இரசாயனப்...

(முதலாம் பக்கத் தொடர்)

லது பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் கூட்டம் நடைபெறுவதற்குச் சில மணி நேரத்துக்கு முன் வைக்கப்பட்டதா என்பது குறித்து இதுவரை தெளிவாகத் தெரியவரவில்லை என்று மூத்த இராணுவ அதிகாரி ஒருவர்ரூபவாஹினிக்குத்தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-6-3)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org